10th March 1969]

(b) whether a statement containing the particulars of income and expenditure of the lines will be placed on the Table of the House?

நட்டம் உண்டாக்கும் இரயில் பாதைகள்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழகத்தில் மத்திய அரசுக்கு நட்டம் உண்டாக்கும் இரயில் பாதைகள் எவை எவை ?

(இ) அப்பாதைகளின் வரவு-செலவு விபரம் சபையில் வைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : (அ) தமிழ்நாட்டில் கீழ்க்கண்ட கிளை இருப்புப்பாதைகள் விரயத்தில் செயல்படுவது காரணமாக அவற்றை இந்திய அரசு மூடிவிட கருதியுள்ளது. இரயில்வே வாரியம் 1965-66-ம் ஆண்டில் கீழ்க்கண்டவாறு விரயம் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளது :—

	(ரூபாய் லட்சத்தில்.)
(1) மேட்டுப்பாளையம்—உதகமண்டலம்	27.71
(2) மாயூரம்—தரங்கம்பாடி	2.11
(3) பேரளம்—காரைக்கால்	1.76
(4) நீடாமங்கலம்—மன்னார்குடி	1.57

(இ) மேற்சொன்ன இருப்புப்பாதைகளின் வரவு-செலவுப் பற்றிய முழு விவரங்கள் இவ்வரசாங்கத்திடம் இல்லை. அவ் விவரங்களை அனுப்புமாறு இரயில்வே வாரியத்திற்கு கடிதம் எழுதப்பட்டுள்ளது.

திரு. வி. தங்கபாண்டியன் : தலைவர் அவர்களே, இந்த ரயில்வே பாதையில் நஷ்டம் ஏற்படுகிறது என்பதற்காக மத்திய அரசு அவைகளை மூட வேண்டுமென்று வற்புறுத்துவதை தமிழக அரசு மறுத்து அந்த ரயில்வே பாதைகளை மூடக் கூடாது என்று தெரிவித்தது. மீண்டும் தொடர்ந்து அதை வற்புறுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : நம்முடைய மாநில அரசாங்கம் ஏற்கனவே மத்திய அரசாங்கத்திற்கு அந்த இருப்புப் பாதைகளை அப்புறப்படுத்தக் கூடாது என்று எழுதியிருக்கிறது. மீண்டும் தொடர்ந்து வற்புறுத்தும்.

Division of Wards in Dindigul Municipality

*179 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether the High Court cancelled the division of wards of Dindigul Municipality; and

(b) if so, the action taken by the Government thereon?

[10th March 1969

திண்டுக்கல் நகராசபை வட்ட பிரிவினை

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திண்டுக்கல் நகராசபை வட்ட பிரிவினையை உயர்நீதி மன்றம் ரத்து செய்ததா ?

(இ) ஆமெனில், அதன்மேல் அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி : (அ) திண்டுக்கல் நகராட்சி சம்பந்தப்பட்ட 22—11—1967-ம் தேதிய கிராம வளர்ச்சி உள்ளாட்சித்துறை அரசு ஆணை எண் (நிலை) 2146-ஐ மொத்த முப்பது வார்டுகளில் இருபத்தேழு வார்டுகளும் பெண் அங்கத்தினருக்கு ஒதுக்கப்பட்ட இருபதாவது வார்டும் பொருத்த வரையில் உயர் நீதி மன்றம் தனது 5—11—1968 தேதிய தீர்ப்பில் ரத்து செய்தது.

(இ) மேற்படி ஆணையை எதிர்த்து உயர் நீதி மன்றத்தில் ரிட் மேல் மனு தாக்கல் செய்வது பற்றி விஷயம் அரசாங்க பரிசீலனையில் இருக்கிறது.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, திண்டுக்கல் நகர மன்றத்தில் ஏகமனதாக வார்டு பிரிவினை செய்து அனுப்பிய தீர்மானத்தில் அரசாங்கம் தலையிடுவதற்குக் காரணம் என்ன ? ஏன் தலையிட்டது ?

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி : அரசாங்கம் தலையிட உரிமையிருக்கிறது. அங்கே இருக்கிற கட்சிக்காரர்களும் பொது மக்களும் மாறுதல் செய்யவேண்டுமென்று அனுப்பிய வேண்டு கோளை ஏற்றுத்தான் அந்த மாறுதலைச் செய்தது.

Mariamman Temple, Ootacamund

*180 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether the Tamil Nadu Government gave any assistance for the renovation of the Mariamman temple at Ootacamund by granting Rs. 10,000 in the financial year 1966–67; and

(b) if so, whether there is any proposal to assist other temples also, in the same manner?

உதகை மாரியம்மன் கோவில்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு அறநிலைய பாது காப்பு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1966-67-ஆம் நிதி ஆண்டில் உதகையிலுள்ள மாரியம்மன் கோவில் திருப்பணிக்காக தமிழக அரசு ரூ. 10 ஆயிரம் மானியமாக கொடுத்து உதவியதா ?

(இ) ஆமெனில், மற்ற கோவில்களுக்கும் இப்படி உதவும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?